644

வ்யய ஸூ பங்குனி மீ

ஸம்புடம் - 6
ஸஞ்சிகை - 3

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 MAR 1947
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

3L
Q22ணவ2l, N4l
N47.6.3
18923

March 1947
Vol. 6 No. 3

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

			பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	....	53
2.	மஹா குலம்	....	59
3.	தமிழ் வேதமும் தாய் தந்தையரும்	....	61
4.	திருவேங்கடவன் திருக்குறள்	...	63
5.	செய்திகள்	....	67
6.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	...	71
7.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	...	72

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

வ்யய ௵ பங்குனி மீ

1உ	வெள்ளிக்கிழமை	...	சூந்ய திதி: மீநரவி 19. 57
2உ	சனிக்கிழமை	...	அதிதி
5உ	ஞாயிற்றுக்கிழமை	...	மீந க்ருஷ்ண நவமி திதி
6உ	புதன்கிழமை	...	மூநித்ரய ச்ரவண த்வாதசி
9உ	சனிக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
10உ	ஞாயிற்றுக்கிழமை	...	யுகாதி பண்டிகை
14உ	வியாழக்கிழமை	...	மீந சுக்ல பஞ்சமி திதி
15உ	வெள்ளிக்கிழமை	...	மீந சுக்ல ஷஷ்டி–ஸப்தமி திதித்வயம்
16உ	சனிக்கிழமை	...	அஷ்டமி திதி
*18உ	திங்கட்கிழமை	...	ஸ்ரீராம நவமி
19உ	செவ்வாய்க்கிழமை	...	ஏகாதசி வ்ரதம்
22உ	வெள்ளிக்கிழமை	...	பங்குனி உத்திரம்
30உ	சனிக்கிழமை	...	மீந க்ருஷ்ண ஸப்தமி திதி
31உ	ஞாயிற்றுக்கிழமை	...	மீந க்ருஷ்ண அஷ்டமி திதி: மேஷரவி 40-19 [மேஷ ஸங்கர்மண தர்ப்பணம்]

---

* குறிப்பு—17உ ஞாயிற்றுக்கிழமை 6-நாழிகைக்கு மேற்பட்டு அஷ்டமி வேதை இருக்கிறபடியால், அன்று ஸ்ரீ ராம நவமி உத்ஸவம் இல்லை; மறுநாள் (அதாவது: 18உ திங்கட்கிழமை) தான்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 MAR 1941
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 6	வ்யய ஹூ பங்குனி மீ	ஸஞ்சிகை 3

"அஹோபிலே காருடஸைலமத்யே
க்ருபாவஸாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஸரணம் ப்ரபத்யே ॥"

—:-o-:—

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதா சந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

——o——

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[6-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,

அட்வோகேட், திருச்சி.]

தர்க்கன்:—கலியுகத்தில் இந்த மத்ய நாடு தன் ஸத்வப் பெருமையை இழந்திருக்கிறது. தென் தேசத்தைப் பார்க்கலாம். மருதவ்ருதா முதலிய மஹா நதிகள் சூழ்ந்த ஸ்ரீரங்காதி ஸ்தாநங்களில், இன்னும் நாராயண பராயணரான மஹான்கள் வஸிப்பதாகப் புராணங்களில் மஹர்ஷிகள் மகிழ்ந்து பாடுகிறார்கள். இதனால், 'நாராயண பராயணா:' என்றுள்ள ஸ்ரீபாகவத ச்லோகம் நினைப்பூட்டப்படுகிறது. நாராயணன், நாரங்களாகிய ஸர்வ சேதநர்க்கு ப்ராப்யமான அயநம்; பரகதி ப்ராபகமான அயநம். அவனையே பராயணமாகக் கொண்டு தத்பரா யிருப்பவர். அர்த்த காம பரரா யிராமல் நாராயண பரரா யிருப்பவர். 'நாராயணபரோ ப்ரஹ்ம' என்றபடி ப்ரஹ்ம மென்னும் வேதங்க ளெல்லாம் நாராயணபரம்.

விவேகர்:—இந்தத் தேசத்தில், தூர தேசத்திலிருந்து வந்து சிலர் குஸீத வ்ருத்தி என்னும் அதிக வட்டிக்கு விட்டுப் பணத்தை அபரிமிதமாய்ப் பெருக்கும் தொழிலை நடத்திக்கொண்டு பணப் பெருக்கிலேயே மகிழ்கிறார்கள். இவர்கள் தர்மம், காமம், மோக்ஷம் மூன்றையும் நினைப்பதேயில்லை. அர்த்தம் ஒன்றையே தேடிக்கொண்டு, அதைக் குவிப்பதிலேயே ரஸிக்கிறார்கள். தூர தேசத்தில் தங்கள் பத்நிகளை விட்டு விட்டு, இங்கே அர்த்தத்திலேயே மகிழ்கிறார்கள். இவர்கள் தம் ஓலையில் கடன்காரர்களுக்குப் பற்றெழுதும்போது, சித்திர குத்தன் தன் ஓலைச் சுருணையில் இவர் பேரில் பற்றெழுதுவதை இவர் ஏன் நினைப்பதில்லை? [ஸ்வாமி காலத்திலேயே தூர தேசங்களிருந்து தனியே வந்து கந்துக் கடை வைத்து அதிக வட்டியினால் பணத்தைப் பெருக்கும் வ்யாபாரிகள் மிகுந்திருந்தன ரென்று தெரிகிறது. விச்வகுணாதர்சத்திலும் இவர்களைப் பற்றி வர்ணித்திருக்கிறது.]

[ஸுபாஷித நீவியிலுள்ள 'விதாதா தா யோ தரா ஸ்ருதே நகிம்' 'உத்காரஹார நிஷேவிதா ஸவி' என்கிற இரண்டு ச்லோகங்கள் இங்கே படிக்கப் பட்டிருக்கின்றன. அந்த க்ரந்தத்திற்குப் பிறகு இந்த நாடகம் இயற்றியது. அப்படியே யதிராஜ ஸப்ததி ச்லோகங்களும் இங்கே படிக்கப்படுகின்றன. இந்த ச்லோகங்களின் பொருள்கள் அந்த க்ரந்தங்களின் உரையில் கூறப்பட்டுள்ளன.]

ஆவணக் காப்பக நூலகம்

OF THE REGISTRAR OF BOOKS MADRAS

தார்க்கன்:— [ரதத்தை வேகமாய் நடத்துவதாக அபிநயித்து,]

“ஏஷா ஸஹ்ய ப்ராஸம்பாதவதிவ பததி ஸஹ்யாத்ரி ஶிகராத்
தவள காவேர்யாபகா ஸரித்ஸுரஸிந்தோரதிஶாயினீ ”

இதோ இங்கே கங்கையிற் புனிதமான காவிரி, ஸஹ்ய பர்வத சிகரத்திலிருந்து அஸஹ்யமாக வேகம் இரைச்சல் ஸம்ப்ரமங்களோடு கீழே விழுந்தோடுகிருள். ‘ஸுரஸிந்தோரதிஶாயினீ ஸரித்’ என்பதால், “கங்கையிற் புனிதமாய காவிரி நடுவு பாட்டுப், பொங்கு நீர் பரந்து பாயும் பூம்பொழி லரங்கம்” என்ற திருமாலையை ஸ்மரிக்கிருர். ஸஹ்யத்தில் இவள் உத்பத்தி யென்னும் ப்ராரம்பம் இருந்தாலும், இவள் ப்ராரம்பம் ஸஹ்யமாயிருக்கிற தென்கிற விரோத ப்ரதர்ஶந ரஸம் கவனிக்கத்தக்கது.

விவேகர்:— [சுற்றிலும் கண்களைச் செலுத்தி வருத்தத்துடன்]

“இமாம் மதுரவாரீணாம் தக்ஷிணாபதஜாஹ்நவீம் ।
சோரை: பரிவ்ருதாம் வந்யை: வித்யாம் குமதிவிப்லுதாம் ॥ ”

அருந்த மதுரமான தீர்த்தத்தை யுடைய இந்தத் தென்னுட்டுக் கங்கை, திருடர்களான வேட ஜநங்களால் நிறைந்த தீரத்தையுடையவளா யிருப்பதைப் பார்த்தால்,

“யோऽந்யதா ஸந்தமாத்மாநம் அந்யதா ப்ரதிபத்யதே ।
கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா ॥ ”

என்றபடி பரப்ரஹ்மத்துக்குப் பாதந்த்ரமாய், அவருக்கு ஸ்வத்தாகிய தன் ஸ்வரூபத்தை ‘அவர் ஸொத்தல்ல; தாம் ஸ்வதந்த்ரரே’ என்னும் ஆத்ம ஸ்வரூப சோரர்களால் உபநிஷத் வித்யா தேவி ஆக்ரமிக்கப்பட்டு, ‘ப்ரவாதே கதளீ யதா’ என்று அஶோக வநத்தில் பிராட்டி நடுங்கினதுபோல் நடுங்குவதைக் காண்பது போல் துக்கமாயிருக்கிறது. ஸ்ரீ மத்வ பாஷ்யத்தில் ‘பிபேத்யல்பஶ்ருதாத்வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி’ என்கிற பாரத ச்லோகத்தில், ‘ப்ரதரிஷ்யதி’ என்பதற்குப் பதிலாக ‘ப்ரசலிஷ்யதி’ என்று பாடம் காட்டப் பட்டது. ‘ப்ரசாலயிஷ்யதி’ என்று ஸ்ரீ ஜயதீர்த்தர் பொருளுரை. ‘என்னையும் என் உறுதியையும் அசைத்து விடுவான்’ ‘என்னை நடுங்கச் செய்வான்’ என்பது அதன் பொருள். ‘ப்ரதரிஷ்யதி’ என்ற பாடத்தில், ‘தாரகமாகிய என்னையே ப்ரதாரகமாக (ப்ராணிகளை ஏமாற்றி அதத்வத்தை உரைப்பதாகச்) செய்து விடுவரோ என்று பயப்படுகிறேன்’ என்பது பொருள். ‘தாரணம்’ என்னும் ஸம்ஸாரோத்தாரணத்தைச் செய்வதற் கென்றே கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் வேதத்தை ப்ரதாரணம் என்னும் விஞ்சித்தலைச் செய்வதாக ஆக்கினுல், அதனிலும் வேதத்துக்கு மிக்க பய முண்டோ? நமக்கு அபயம் தர வேண்டி, அபேதம் அந்தச் சோரரிடம் பயத்தால் நடுங்குகிறது. ராக்ஷஸிகளால் சூழப்பட்டு ராவண பயத்தால் துக்கப்படும் ஸீதைக்கு ‘வித்யாம் ப்ரஶிதிலாமிவ’, ‘வாசமர்த்தாந்தரம் கதாம்’ என்று ஹநுமான் வித்யை வாக்கு த்ருஷ்டாந்தங்களை

நினைத்துப் பேசுவதை ஸ்வாமி இங்கே நினைப்பூட்டுகிறார். இங்கும் உபநிஷத் வித்யா வாக்குக்கு விபரீதமான அர்த்தாந்தரத்தைச் சொல்லுவதாகப் பொருளுரைப்பதே அதற்குப் பயஹேது; அதற்கு விப்லவம். 'வஹூ ꞉விப்லவகூரு தः' என்று போஜராஜர் யோக ஸூத்ர வ்ருத்தியில் கூறியபடி, 'விப்லவம்' என்பது விபரீதமான வ்யாக்யாநம் செய்வதைக் குறிக்கிற தென்கிற ரஸம் அநுபவிக்கத் தக்கது. இங்கே 'விப்லு-தாம்' என்பது மிகப் பொருத்தமுடையது. 'வூவா தகஊஜீ நூாயெந வயூஜெ' என்று இக்காவேரித் தலைப்பு க்ராமங்களில் அக்ரஹார வாஸிகளான ஸாதுக்கள் சோர பயத்தால் நடுங்குவதை வர்ணிப்பதும், ஸுந்தர காண்டத்தில் ஸீதையின் சோக பய வர்ணநங்களை இங்கே ஸ்வாமி ஸ்மரிப்பதைக் காட்டும். ஸத்யா காலம் முதலிய இடங்களில் எழுந்தருளி யிருக்கையில், தலைக் காவேரீ வரையில் ஸஞ்சாரம் செய்து, அங்குக் காவேரீ தீரங்களிலுள்ள அக்ரஹாரங்களை ஸ்வாமி நேரில் அநுபவித்திருக்க வேணும்.

தர்க்கன்:—இதோ இங்கே தெரியும் யாதவ கிரியைப் பார்க்க வேணும், யதுகுல நாதனை கண்ணன் பரிக்ரஹித்திருப்பதால், அவர் குலம் யாதவ குலமென்று ப்ரஸித்தி பெற்றது போல, யாதவாசலமென்று பெயர் பெற்றதும். ப்ருஹஸ்பதியிலும் சிறந்த புத்திமான்களான பகவச் சரண கமல ப்ருங்கங்களாலும், பாதராயணர் சுகர் முதலிய மஹர்ஷிகளாலும் உபாஸிக்கப்பட்டது திருநாராயண க்ஷேத்ரம். இது ஸம்யமி ஸார்வபௌமரான யதிராஜனுடைய விஜய ஸ்தாநம். இது தக்ஷிண பதரிகாச்ரமம் எனப்படும். பதரீ நாராயணனைப் போல் திருநாராயணன். வட பதரீகாச்ரமம் ஸ்ரீ சங்கரர் வஸித்தது. இந்தத் தக்ஷிண பதரீ ஸ்ரீ ராமாநுஜர் வஸித்தது. ப்ருஹஸ்பதிக்கு மேற்பட்ட புத்திமான்கள் என்பது, ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ர ஸ்வாமி முதலிய ஸாமகாஸிகரைச் சொல்லும்.

"ஶுகாதிஸிர ஷவாஸிதம் ஶுஹஅஸிதூஹாஜொஜ நாः
ஸஉஹூஹயவாரணம் ஶரணயதி நாராயணழ ॥'

சுகர் முதலிய பக்தி வைராக்ய நிதிகளான மஹா முநிகளால் உபாஸிக்கப்படுபவரும், ஸமஸ்த பயங்களையும் போக்கி நிர்ப்பய நிர்ப்பரராகச் செய்பவருமான இந் நாரயணனே சரண மென்று பெரியார் பற்றி இங்கேயே வஸிப்பர்.

விவேகர்:—[மிகவும் ஆசையுடன் பார்த்து ஆலோசித்து] ஸஹ்ய மலையின் அருகில் இருப்பதால், அங்கிருந்து அடிக்கும் குளிர்ந்த காற்று எல்லோருக்கும் ஸஹ்ய மாகாது. கர்நாட தேசத்தின் லக்ஷ்மிக்கு இது கர்ணாபரணம் போன்றதாயும், வஸிப்பதற்கு உத்தம குண முடையதாயு மிருந்தாலும், அரவிந்த லோசனன் திருவடிக் கமல த்யாநத்திற்கு அநுகூலமான மற்ற ஸ்தாநங்களையும் பார்த்துச் சொல்.

தர்க்கன்:— இதோ பரசுராம க்ஷேத்ர மென்று சொல்லப்படும் கேரள தேசத்தில் ஸ்ரீ பத்மநாபனால் அதிஷ்டிதமான திருவநந்தபுரம் காண்கிறது.

“ நாஹம் நாபி ச ஸுதோ ந ச ஸனகாத்யா நைவ ந ச ரகுநாதோ
யதா நாரோவித தெ தவேஶ ச நிரணம் ஜா நஷிவிஷோ வாழு ।
ஜஹம் நாஹி ஸரோஜவாஸமாபி வரயஸக வராஹார சாகணாயநு
ஸேதெவ நரஸாவ ஸளசமயநெ ஸ்ரீவத்ஸ நாஹ ஸ்ரியா ॥ ”

புரம் அநந்தபுரம். திவ்ய தேசத் தெம்பெருமான் பத்மநாபன். அநந்தனே பத்ம நாபன். அத்திருநாமமே ப்ரஹ்மா, அவர் புத்ரர், பௌத்ரர் முதலியவர் பகவானுடைய நாபீ கமலத்திலிருந்து பிறந்த புத்ர பௌத்ராதிக ளென்று ப்ரத்யக்ஷமாகக் காட்டி, பகவானுடைய ஸர்வ காரணத்வத்தையும் ஸர்வஸ்மாத் பரத்வத்தையும் நமக்கு ஸித்தாந்தப்படுத்துகிற தென்று ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் பட்டர் பாடியதை இங்கே ஸ்வாமி நினைக்கிறார்.

“ ஜகத்த்ரயாந்தோததிஸம்ப்லவோதே
நாராயணஸ்யோதர நாபி நாளாத் ।
விநிர்கதோஸீதி வாக்வைவ மிதைஷா
கிம் த்வீஶ்வர த்வந்ந விநிர்கதோஸி ॥ ”

என்று ஸ்ரீ பாகவதம் தசமஸ்கந்தம் 14-ம் அத்யாயத்தில் ப்ரஹ்ம ஸ்துதியில், “மூவுலகும் ஏகோதகமாக ப்ரளயத்தில் மக்நமா யிருக்கையில் நாராயணனுடைய நாபீ கமலத்திலிருந்து அஜனென்று வெறும் பெயர் பெற்ற நான் வெளியே வந்தே னென்று உலகத்தோர் சொல்லுவது பொய்யே. அநந்த விஸ்தாரமான அவ்வுந்தியிலிருந்து நான் இன்னும் வெளிப்படவேயில்லை” என்று ப்ரஹ்ம தேவர் பாடியதையும் ஸ்வாமி நினைத்து இங்கே பாடுகிறார். “நானாவது, என் குமாரனாவது, எந்தத் தேவர்களாவது, ஸர்வ காலமும் த்யாந நிஷ்டரான முநி கணங்களாவது, விஷ்ணு பத மென்னும் விஷ்ணு ஸ்வரூப மஹிமாதியை அறிந்தவ ரல்லர். நித்ய ஸூரிகள் ஸர்வ காலமும் பார்த்துக் கொண்டே இன்புறும் விஷ்ணு பரமபதத்தை நாங்கள் ஒருவரும் அறியோம். இப்படித் தம்முடைய நாபீ கமலத்தில் படுத்திருக்கும் சிசுவான ப்ரம்ஹாவின் மழலைச் சொற்களைத் திருச்செவி சாத்திக்கொண்டு பந்நக ஸார்வ பௌமனை அநந்தனாகிய பர்யங்கத்தில் ஸ்ரீயோடு ஸ்ரீ பத்மநாபன் சயனித்துக்கொண்டு ஸேவை ஸாதிக்கிறார்.” ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில் இந்த அநுபவமே மற்றொரு ப்ரகாரமாக விசித்ரமாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

“ ஹாராவலீஸ்ருஷ்ட பரஜம் ரவபூர்ம ரவபவபோத வயஸ்கசக வயஸ்கம் ரதள
ஸம்ஸ்ருஷ்டி தத்வஸா ந கேளீரஸிகள தள ஹம்ஸ தீந: வதீ ।
நாபீவம் கஜஸாயிந: ஸ்ர திஸ வைரநேத்ரா நத்ரபஸஸ்லேதள
ஸிம்ஹஸ்த்ராம்பரஜஸம்ஹவஸத்ர வஅநெ ரோம் தஸ்ஸதித்ரா திஹி: ॥ ”

என்பது அந்த ச்லோகம். அநந்தன் தன்னுடைய சரீரத்தை, சயனித்திருக்கும் திவ்ய தம்பதிகளின் அநந்தாயாமத்துக்குத் தக்கபடி மிகவும் விஸ்தாரப்படுத்திக் கொண்டிருக்கிறார். படுக்கை சிறிதாயும், சயனித்திருப்பவர்கள் ப்ருஹத்தாயு

மிருந்தால், நித்ரா ஸௌகர்யமும் ஶயந ஸௌகர்யமும் இருக்கமாட்டா. சயனித்திருக்கும் தம்பதிகளின் ப்ருஹத்தான ஆகாரத்திற்குத் தக்கபடி, அநந்தனாகிய ஶேஷன் தன் சரீரத்தை 'காலஶேவி', 'சுவமிவிததாஹவதி' என்று ஓதிய சக்தியால் அவர்களுக்கும் பெரியதாக விஸ்தார மாக்கியுள்ளார்.

'ஶரீரஹெஹெஷ்வவ ஶெஷதாம் ஶதெ
யதாயொசிதம் ஶெஷ உதீயதெவஸ்யெ: ॥'

என்ற ஸ்தோத்ர ரத்நத்தை நினைக்கிறார். சயனித்திருக்கும் தம்பதிகளின் விஸ்தீர்ணமான திருமேனிக்கு உசிதமாய்த் தம் உடலேயும் விஸ்தரிக்கிறார். அவர்களிலும் அதிஶயிதம் இவர் திருமேனியாகிய அவர்கள் பர்யங்கம்.

ஸ்ருஷ்டி ஸ்திதி ஸ்திதியின் முடிவு என்னும் தம் தயை ஸ்வபாவத்தின் விஹாரத்தில் ரஸிகராயுள்ள தம்பதிகள் 'நாஜீகெந ஷூஶிதாஜவாவெயவொநிடீதாணா' என்றபடி, நாபீ கமலம் விகஸிக்கத் தொடங்கி வ்யஷ்டி ஸ்ருஷ்டி ஆரம்பிக்கப்போகும் அவஸரத்தில், ப்ரஹ்மா அதிலிருந்து அவஹிக்கும் அவஸரம். அத்புதமான ஜ்ஞாநமும் வேதங்களின் ப்ரதிபாநமும் உடையவராயினும் அவர் சிசு. சிசுவாயினும் ப்ரம்ஹதேவ மூர்த்தி. சிசுத்வத்துக்குத் தக்கபடி 'ஓம் தத் ஸத்' என்று ஏகாக்ஷரமான திருநாமங்களை அவ்யக்த மதுரமான மழலையாக உச்சரிக்கிறார். பகவானுக்கு நேர் சிஷ்யரான ஜ்ஞாநி. 'ஓம் தத்ஸதிதி நிர்தேஶொ ப்ரஹ்மணஸ்த்ரிவிதஃ ஸ்ம்ருதஃ' என்று பகவான் கீதையில் பாடும் சிறந்த திருநாமங்களை உச்சரிப்பர். இக்குழந்தையின் அம்ருத மழலையைக் கேட்டுத் தம்பதிகள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து மந்தஹாஸத்துடன் இன்புறும் ரஸத்தில் ஸ்வாமி ரஸிக்கும் அழகு ரஸிக்கத்தக்கது. 'ஹ்ருதயம் த்வேவஜாநாதி ப்ரீதியோகம் பரஸ்பரம்' என்று பால காண்ட முடிவில் மஹர்ஷி பாடிய அத்தம்பதிகளின் நிரதிசய நிரவதிகமான பரஸ்பர ப்ரீதி ரஸம் 'தயோஸ்து உபாஃ', 'ஸம்ஶ்ரீகாஸி விஶாலொகெ: ஸாயமெ ஹ்ருசீபோஷு ஜந்துநாம்' என்றபடி ஸ்ருஷ்டி ப்ராரம்பாவஸரத்தில் ப்ரபஞ்சத் தாய் தந்தையரின் ப்ரஜா ப்ரேம ரஸம், உலகத்தை ஸ்ருஷ்டிக்கப் போகும் குழந்தையிடம் ஸ்நேஹ ரஸம், 'தயாஸஹாஸீந உநந்த ஶொஜிநீ' என்று ஆளந்தார் பாடியபடிக்கும்,

"ஶெஷஶ்ரீதம் விஜய உநஸாம் ஊஸவயஸ்ரு த்ரீநாம்
ஸம்வதுஜெ விஹார விஶ்ர யஸ்ரு ஶய்யாவிஶெஷா: "

என்று ஸ்ரீ ஸ்துதியில் பாடிய படிக்கும், சயனித்திருக்கும் திவ்ய மிதுநத்தைப் போல அநந்தமான ஆநந்த பரிதனயிருக்கும் ஶேஷனுடைய இன்ப ரஸம், பகவானுடைய அரவிந்த நாபியில் ஸத்யோஜாதரான பகவானுடைய சிஷ்யரான ப்ரஹ்ம தேவனுடைய இன்ப ரஸ காநம், இத்தனையும் அநுபவித்து ஸ்வாமி பாடும் ரஸம். இப்படி ரஸ கநமான அமைப்பை என் சொல்வது ?

விவேகர்:— [பரசுராம க்ஷேத்ர மென்று ப்ரஸித்தமான கேரள பூமியில் பரசுராமன் த்யாந த்ருஷ்டியால் ஸேவித்துக் கொண்டு பாடுகிறார்.]

“𑌕𑍍𑌰𑍋𑌧𑌾𑌗𑍍𑌨𑍇𑌰𑍍𑌜𑌮𑌦𑌗𑍍𑌨𑌿𑌪𑍀𑌡𑌨𑌭𑌵𑌂 𑌸𑌨𑍍𑌤𑌰𑍍𑌪𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍
𑌅𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌮𑌿𑌹 𑌸𑌨𑍍𑌤𑌤𑌕𑍍𑌷 𑌯 𑌇𑌮𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌸𑍍𑌸𑌪𑍍𑌤𑌕𑍃𑌤𑍍𑌵𑌃 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌮𑍍 ।
𑌦𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂 𑌕𑍍𑌵𑌚𑌨 𑌤𑌾𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑍍𑌯 𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌂 𑌵𑌸𑌨𑍍
𑌅𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌮𑌪𑌾𑌕𑌰𑍋𑌤𑍁 𑌭𑌗𑌵𑌾𑌨𑌾𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍀𑌟𑌂 𑌮𑍁𑌨𑌿𑌃 ॥”

இந்த ச்லோகம் தஶாவதார ஸ்தோத்ரத்திலும் உள்ளது. முன்பே அந்த ஸ்தோத்ரத்தில் பாடியதைத் தம் ச்லோக மாலையால் இங்கும் வைக்கிறார். இவர் க்ஷத்ரியப் பூண்டே யில்லாமல் இருபத்தொரு தலைமுறை அவர்களை அழித்துப் பூமியை க்ஷத்ரிய ஜாதி சூந்யமாய் ஆக்கினவர்; பகவானுடைய அம்ஶாவதாரம். அதனால் இவருக்கு அத்தனை பலம். தஶாவதார ஸ்தோத்ரத்தில் எல்லா அவதாரங்களையும் பேர் சொல்லிக் கூப்பிடும் ‘𑌇𑌚𑍍𑌛𑌾𑌮𑍀𑌨 𑌵𑌿𑌹𑌾𑌰𑌕𑌚𑍍𑌛𑌪’ என்கிற ச்லோகத்தில், இவரைத் ‘𑌰𑍋𑌷𑌰𑌾𑌮’ என்று கூப்பிடுகிறார். ரோஷமே இவருக்கு ஸ்வரூப நிரூபக தர்மமாக இருந்தது. ‘ரோஷத்திலேயே இவர் ரமிப்பவர்’ என்று ‘𑌰𑍋𑌷𑌰𑌾𑌮’ என்பதால் வ்யஞ்ஜநம் செய்தார். மூன்று ராமர்களில், மனத்துக் கினியனை ராமன் நடு நாயகமான அம்ஶீ. முன்னும் பின்னு முள்ளவர் அவர் அம்ஶங்கள். இவருக்கு எப்படி ரோஷம் கரைகடந்ததோ, அப்படி நடு நாயகமான ராமனுடைய கருணை கரை கடந்த தென்பதை அடுத்தபடி ‘𑌕𑌰𑍁𑌣𑌾 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥’ என்னும் ஸம்போதநத்தால் விளக்குகிறார். ‘𑌤𑌦𑍍𑌗𑍁𑌣𑌸𑌾𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑌃’ என்ற ப்ரம்ஹ ஸூத்ர ந்யாயப்படி குணத்தையிட்டு அழைப்பது. ராமன் தன்னுடைய ஸீதாவியோக ஶோகாக்நியால், ஸீதைக்காக ராவணனிடம் மிக்க பராக்ரமத்தோடு போரிட்டு ப்ராணனை விட்ட ஜடாயுவை ப்ரஹ்ம மேத ஸம்ஸ்காரம் செய்தார். ‘அக்நி’ என்னும் எழுத்துக்களைக் கடை யெழுத்துக்களாகக் கொண்ட ‘ஜமதக்நி’ என்னும் நிரபராதியான தன்னுடைய பிதாவைக் கார்த்த வீர்யரான ஒரு க்ஷத்ரிய அரசன் கொன்றதால், பரசுராமருடைய க்ரோதாக்நி கிளம்பி மண்டி எரிய ஆரம்பித்துத் தாவாக்நி யாயிற்று. ஓர் அக்நியைப் பீடநம் செய்து கிளறி, அதிலிருந்து கிளம்பின க்ரோத நெருப்பு என்பது ரஸம். க்ஷத்ரியரான அரசர் ஸாதுக்களுக்கு ரக்ஷகரா யிருக்கவேணும். அதற் கென்றே அந்த ஜாதி ஏற்பட்டது. வேலியே பயிரை மேய்வது போல, ரக்ஷகனே நாஶகனென்று கோபம். ப்ரியமான பிதாவைக் கொன்றதால் கிளம்பின கோபாக்நி அது. தகப்பனாருடைய நியமநத்தால் தாயைக் கோடாலியால் வெட்டிய ஆஜந்ம ப்ரஹ்மசாரி இவர். க்ருஹஸ்தரா யிருந்தால், இப்படி ஆறுத சினமிராது. மண்டி எரியும் இந்த பித்ரு வதோத்தித க்ரோதாக்நிக்குத் தர்ப்பணமாயும், பிதாவுக்குத் தர்ப்பணமாயும், க்ஷத்ரியர்களுடைய ரக்த வெள்ளங்களால் ‘ஸ்யமந்த பஞ்சகம்’ என்னும் ரக்த ஸரஸ்ஸுக்களை ஏற்படுத்தி, அந்த ரக்த தீர்த்தங்களைக்கொண்டே பித்ருக்களுக்கும், தந் நிமித்தமாகக் கிளம்பிய கோபாக்நிக்கும், நன்றாக ஸந்தர்ப்பணம் செய்தார். பித்ரு தர்ப்பணங்களில் 21- என்னும் எண்ணை ஆதரிப்பதுண்டு. ‘𑌸𑌕𑍃𑌤𑍍𑌸𑌕𑍃𑌤𑍍𑌅𑌸𑌕𑍃𑌤𑍍’ என்னும் ப்ரமாண வசநத்தை

'ஷிவஷ்ரூசுவ' என்பதால் ஸூசிக்கிறார். 'வஜுதகூ' என்பதற்கு 'வெட்டிச் செதுக்கினார்' என்பது பொருள். கோடாலியால் காட்டை வெட்டி அழிப்பதுபோல், க்ஷத்ரிய வநத்தைத் தமது பரசு என்னும் ஆயுதத்தால் கிளம்பக் கிளம்ப வெட்டி அழித்தார். பூமியை ஆண்ட ராஜாக்களை வெட்டி அழித்ததால், இவர் வசமான பூமியைத் தாம் ஆள ஆசைப்பட வில்லை. தாம் ஜயித்த பூமியைத் தக்ஷிணையாகக் கச்யபருக்குக் கொடுத்து விட்டு, அவருக்குத் தாநம் செய்த பூமியில் வஸிக்க மனமில்லாமல், தாம் ஸமுத்ரத்தில் தம் பாண வேகத்தால் ஒரு ஸ்தலத்தை ஏற்படுத்திக்கொண்டு அந்த க்ஷேத்ரத்தில் வஸித்தார். பகவானுடைய அவதாரமான இவர், இப்படி க்ஷத்ரிய ஜாதியையே நிர்க்ருண ராய் அழிக்கலாமோ வென்றால், அதற்குக் காரணம்: தம்மை ரக்ஷித்துக் கொள்ள வலிமை யில்லாத தபஸ்வி ப்ராம்ஹணரைக் கொன்ற க்ஷத்ரிய ராஜரின் மீது வந்த கோபமே. இதனை 'சுபஹ்ணூஉவா கரொத-' என்பதால் ஸ்வாமி வ்யஞ்ஜநம் செய்கிறார்.

இவர் மலைய ப்ராந்தத்தில் வஸிக்கும் மஹர்ஷிகளுக்கு, மோக்ஷ ஸாதநமான நிஷ்காம கர்ம யோகாதி நிவ்ருத்தி தர்மங்களை உபதேசித்துக் கொண்டிருக்கிறார். இவர் சிரஜீவியானதால், விவேகர் இவரையே ஸாக்ஷாத் கரித்து இவர் செயலை வர்ணிக்கிறார். [தொடரும்.]

ஸ்ரீ:

ஸ்ரீஉதெ வீரராவவ வரஹ்ணெ நஉ:

மஹா குலம்

[மூரேர். ஸ்ரீ. உப. எஸ். வரதாசார்யர்.]

ஸத்குல ப்ரஸூத ரென்றும் மஹா குல ப்ரஸூத ரென்றும் நாம் சில ரைக் கொண்டாடுவ துண்டு. மஹா குல மென்றால் என்ன? ஸத்குல மென் றால் என்ன? இவற்றைப் பற்றிச் சிறிதளவு ஆராய்வோம்.

தற்காலத்தில் சிலர் தாங்கள் வஸிக்கும் க்ராமங்களின் பெயரைச் சொல்லிக்கொண்டும், தங்கள் முன்னோர்களுடைய பெயரைச் சொல்லிக் கொண்டும், மஹா குல ப்ரஸூதர்க ளென்று தங்களை நிரூபிக்க முயல்கின் றனர். தாங்கள் ஸத்குல ப்ரஸூத ரென்று காட்டிக்கொள்ளத் தங்கள் பெய ருக்கு முன் 'கோயில் திருமலை' என்னும் ஊர்ப்பெயர்களை எழுதிக் கொள்வதை நாம் காண்கிறோம். ஆனால் இதெல்லாம் மஹா குலம் ஆவதற்குப் போதிய ஹேதுக்கள் ஆகமாட்டா. மஹா குலத்தின் லக்ஷணம் மஹா பாரதத்தில் உத்யோக பர்வத்தில் விரிவாகக் கூறப்படுள்ளது. அதன் ஸங்க்ரஹம் வருமாறு:—

த்ருதராஷ்ட்ரர் விதுரரை எவை மஹா குணங்கள் என்று கேட்க, விதுரர் கூறுகிறார்:—

சாந்த்ராயணம் முதலிய வ்ரதங்கள், இந்த்ரிய ஜயம், ப்ரஹ்மத்தை உள்ளபடி அறிதல், ஸுகதுக்கங்களை ஸஹித்துக் கொள்ளுதல், வேதாக்தமான யஜ்ஞாதிகள், உத்தமர்களோடும் ஸமானர்களோடும் ஸம்பந்தம் பண்ணுதல், துக்கித்த ஜநங்களுக்குத் தேறுதல் கூறுதல், அதிதிகளுக்கு அந்ந மிடுதல்—இவ் வெட்டும் ஸத்புருஷர்களின் அழி வில்லாத குணங்களாம். இத்தகைய குணங் கள் அமைந்த குலமே மஹா குலமாம்.

மேலும்: ஆசாரங்களிலிருந்து வழுவாம லிருத்தல், சாஸ்த்ரப்படி விவா ஹம் செய்துகொண்டு நல்லொழுக்கத்தோ டிருக்கும் ஸவர்ண ஸ்த்ரீ புருஷர் களின் ஸந்தாநமா யிருத்தல், ஸத்குல ப்ரஸூதர்கள் கொண்டாடும்படி சுத்தா நுஷ்டாந பரனு யிருத்தல், பொய் சொல்லாமை முதலிய குணங்கள் எக் குலத் தில் உண்டோ அதுவே மஹாகுல மெனப்படும். இந்த லக்ஷணங்களுக்கு விபரீதமாயுள்ள குலங்கள் நற் குலங்கள் ஆகமாட்டா.

பின்னும்: யஜ்ஞாதிகள் செய்யாமை, தாழ்ந்தவர்களுடன் ஸம்பந்தம் செய்தல், வேதாத்யயநம் செய்யாமை, தர்மங்களை அதிக்ரமிக்கை, ப்ராஹ்மணர் தேவர் முதலியோரது த்ரவ்யங்களை அபஹரித்தல், ப்ராஹ்மணனைத் துன்புறுத்தித் திரஸ்கரித்தல், முதலிய வ்யாபாரங்களால் நல்ல குலமும் கெட்டகுல மாகின்றது.

எந்தக் குலத்தில் ஸதாசார மில்லையோ, அக்குலத்தில் விசேஷித்து வித்யை இருந்தாலும், ஸத் புருஷர்கள் பிறந்திருந்தாலும், விசேஷ தந ஸம்பத் இருந்தா லும், அது மஹாகுல மாகாது. எந்தக் குலத்தில் தந ஸம்பத் ஸ்வல்பமா யிருந்தாலும் ஆசாரம் வழுவாம லிருக்கிறதோ, அந்தக் குலமே மஹா குலம். அதற்கே மேன்மை உண்டு. ஸதாசார மில்லாத குலங்கள், பசுக்களாலும் குதிரைகளாலும் வெறும் வித்யையாலும் தாந்ய ஸம்ருத்திகளாலும் மேன்மை யடையமாட்டா.

மேலே நாம் உதாஹரித்த மஹா பாரத வசநங்களால் ஏற்படுவ தென் னென்னில்:—எவ்வளவு வித்யாவானு யிருந்தாலும், தந தாந்யாதி ஸம்பத்தை அடைந்திருந்தாலும், ஸத்புருஷர்களின் வம்சத்தில் பிறந்திருந்தாலும், ஒருவன் தான் ஸதாசார மில்லாதிருந்தால் அவனைக் குலீநன் என்று சொல்ல முடியாது. "நஹிஜெ௱ஷஸ, ஜெ௱ஷக்ஷம் ஹ-ணெஜெ-ஷக்ஷ உ-அ௱ஞ" என்கிறபடி சாஸ்த் ரோக்தமான நற்குணங்கள் பொருந்தி ஸதாசார ஸம்பந்நனுயிருந்தால் மாத்ரம் குலீநன் என்று கொள்ளலாமே யன்றி, அவனுக்கு வேறு வகையில் குலீநத்வம் ஏற்பட அவகாஶ மில்லை. ஏனெனில்: ஆசார மற்றவனை வேதமும் நெருங்க அஞ்சுகின்றது. "ஆசாரஹீநம் நபுநந்திவேதா:" என்று சொல்லியிருப்ப தால், வேதமும் அவனைப் பரிசுத்தம் செய்யமாட்டுவதில்லை; தவிர, அவனது அநாசாரம் தனக்கு எங்கே வந்து விடுமோ வென்றும் அது பயப்படுகிறது. எனவே ஆசாரஹீநன் ஒன்றுக்கும் உதவாதவனுகிறுன். ஆதலால் நாம் எல்லோ ரும் ஆசார சீலர்களாயிருந்து மஹா குலீநர்கள் ஆவதற்கு முயலவேண்டும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ வரவர ப்ரஹ்மணே நம:

தமிழ் வேதமும் தாய் தந்தையரும்.

[ஸ்ரீ. உப. மேல்மா நரஸிம்ஹ தாதாசார்யர், திருப்பதி.]

[பிராட்டி பெருமாளைப் பார்த்து] "நாதா! நம் குழந்தைகளான ஜீவ கோடிகள் பூலோகத்தில் ஸம்ஸாரக் கடலில் அமிழ்ந்து பல துக்கங்களை அநுபவித்துக்கொண் டிருக்கிறார்களே! நம்முடனிருந்து ஆநந்தாநுபவம் செய்யவில்லையே? ஓடியோடிப் பற்பல அவதாரங்கள் செய்து, என்னையும் உங்களுக்குத் தகுந்தவாறு பிறக்கச் செய்து, வேத வேதாந்த இதிஹாஸ புராணங்களையும் அநேக ஆழ்வார் ஆசார்யர்களையும் உதிக்கச் செய்து, உலகம் உய்யுமாறு செய்தீர்கள். நாம் செய்த யத்நம் பலித்ததற்கு அறிகுறியாக ப்ரம்ஹ ஜ்ஞாநிகளான அநேக பக்தர்கள் நம் இருப்பிடமாகிய வைகுந்த மாநகர் சேர்ந்து நம்மைப்போல் ஆநந்தத்தை அநுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகிலும் இப் பக்தர்கள் யாவரும் பூலோகத்திலிருந்தபோது ஸம்ஸ்க்ருத வேதாந்த மோதி, அதிலுள்ள அர்த்தங்களையே சிந்தித்து நம்மைப் பக்தி செய்துகொண் டிருந்தார்கள். ஆகையால் நம்மிடம் சேர்ந்து நாம் இருக்கும் இருப்பை நேரில் 'அஹமந்நமஹமந்நமஹமந்நம். அஹமந்நாதோஹமந்நாதோஹமந்நாத:' என்று அநுபவித்தும், 'பரம புருஷன் நன்றாகவிருக்கிறான்; பரம புருஷன் நன்றாக அநுபவிக்கிறான்' என்கிறார்கள். ஆழ்வார்களின் தமிழ் வேதம் வல்லார்கள் நமக்கு இங்குப் பல்லாண்டு பாடுவதையும், 'அடியேனை யாட்கொண்டருளே' என்று சொல்லிக்கொண்டு பலவாறாக நமக்குக் கைங்கர்யங்கள் செய்வதையும் கொஞ்ச நாள் பார்த்தபிறகுதான், ஸம்ஸ்க்ருத வேதாந்திகளும் நமக்குக் கைங்கர்யங்கள் செய்வதில் ருசித்துத் தலை சாய்ந்து வருகிறார்கள். இவர்கள் பூலோகத்தில் வஸிக்கும்போதே தமிழ் வேதங்களில் ஊக்க முடையோர்களாக இருந்திருந்தால், வைகுந்தம் புகும்போதே, தூராத மனக் காதல் கொண்டவர்களாய்த் திருப்புகழ்கள் பலவும் பாடி ஆராத மனக் களிப்போ டழுதகண்ணீர் மழைசோர நினைந்துருகி யேத்தி, நம்மைக் கண்டு வழுவிலா வடிமை செய்யவேண்டு மென்று சொல்லிக் கொண்டு தலை வணங்கி, செவிக்கினிய செஞ் சொற்களுடன் வருவார்களே; அப்படி வருவதற்குக் காரணமான தமிழ் வேத ஊக்கத்தை ஜீவ ராசிகளுக்குப் பூலோகத்தில் உண்டு பண்ணக் கூடாதா?"

[இதைக் கேட்டுக்கொண்டிருந்த கருணா மூர்த்தியான நம்மாழ்வார் உடனே லக்ஷ்மீ நாராயணனை நமஸ்கரித்து] "அண்ணலே! அடியேனுக்கு ஒரு வரம் தரவேணும்" என்றார்.

தேவன்:—என்ன வரம் அது?

நம்மாழ்வார்:—" அடியேன் சடகோபன் என்ற பெயரை வஹித்து, அர்ச்சாவதாரம் செய்து நிற்கும் தேவரீர் திருவடி நிலைகள் தோறும் பாதுகைகள் போல் நிற்கப் போகிறேன், என்னுடைய ஸ்பர்சம் எவர்களுடைய சிரஸ்ஸுக்கு ஏற்படுமோ, அவர்கள் யாவரும் உடனே என்னருளால், என்னுடைவும் என்னைப் போன்ற மற்ற ஆழ்வார்களுடையவையுமான தமிழ் மறைகள் யாவும் மறையாதபடி மனத்தில் விளங்கப் பெற்றவர்களாக ஆக வேண்டும். அதனால் அவர்கள் தேவரீர் குணங்களை நினைத்து ஆநந்தக் கூத்தாடிக்கொண்டு அன்னையான பிராட்டியின் குறையைத் தீர்க்கவேண்டும்; இது தான் அடியேன் கேட்டுக்கொள்ளும். வரம் "

தேவன்:—" அப்படியே ஆகட்டும்."

[உடனே ஆழ்வாரும் எம்பெருமானது திருவடி நிலை உருவம் கொண்டு கோயில்கள்தோறும் நின்றார்.]

பிராட்டி:— "நம் இஷ்டத்தை நிறைவேற்றவும் உலகத்தார் ஸந்தோஷிக்கவும், ஆழ்வார் தேவரீருடைய திருவடி நிலை உருவத்துடன் சடாரி எனப் பெயர் பூண்டு நிலவுலகிற் பிறந்தார். ஆழ்வார் சடாரியாகப் பிறந்த காரணத்தை உலகத்தாருக்குச் சொல்ல யார் திறமை வாய்ந்தவர்கள்? சொல்லுங்கள்."

தேவன்:— "நீ யாரை வல்லவரென்று நினைத்திருக்கிறாய்? அதைச் சொல். உனக்கு இஷ்டம் எப்படியோ அப்படிச் செய்யலாம்."

பிராட்டி:— "இதென்ன பரிஹாஸம்! ராமாவதாரத்தில் பட்டாபிஷேக ஸபையில், முத்துமாலையை உனக்கு இஷ்டமானவர்க்குக் கொடு என்றீர்களே! அம்மாதிரியாக இப்பொழுதும் சொல்லுகிறீர்களே! அடியேனுக்கு இஷ்டமானதெல்லாம் உங்களுக்கும் இஷ்டமா?"

தேவன்:— "அந்த ஸபையில் நீ அம்முத்துமாலையை ஹநுமானுக்குக் கொடுத்ததற்கு நான் மெச்சவில்லையா? நீ இஷ்டப்படுவது தான் எனக்கும் இஷ்டம். பண்டைக் காலத்திலிருந்தே நான் உன் இஷ்டப்படி தான் நடக்கிறேன். மேலும் இந்த நவநாகரிக உலகில் உன்னிஷ்டத்தை மறுப்பேனா?"

பிராட்டி:— "என்ன வேடிக்கைப் பேச்சு! நான் யாரைக் கொண்டு சடகோபாவதார தத்வத்தை உலகில் விளக்க உத்தேசிக்கிறேனோ, அவர் பெயரை என் வாயால் சொல்லமாட்டேன்; எனக்கு வெட்கமாயிருக்கிறது. அவர் பெயரும் உங்கள் பெயரும் ஒன்றல்லவா?"

தேவன்:—" ஓஹோ! திருவேங்கடநாதனென்னும் குருவோ! இதைச் சொல்ல வெட்கமா? நவநாகரிகத்தில் ஸ்த்ரீகள் யாவரும், 'மிஸெஸ் ராமாநுஜம், மிஸெஸ் தேசிகன் என்று கணவன் பெயரையே தாங்களும் வைத்துக்கொள்ளுகிறார்கள். நீ என் பெயரைச் சொல்லவும் வெட்கப்படுகிறாயே! நீ சுத்த

புராணக் கிழவிபோலும்!—இது கிடக்கட்டும். சடாரி உதித்த தத்வத்தைப் பத்யமாகப் பாடத் திருவேங்கடநாத னென்றும் ஸ்ரீ தேசிகனைத் தகுந்தவராக தேர்ந் தெடுத்ததைப்பற்றி மிகவும் ஸந்தோஷம். என்னைப்போல் நீயும் ஜகத் துண்டாவதற்குக் காரணம் என்றும், இன்னும் அநேகமான உன்னுடைய புகழ்களைத் தேசிகன் ஸ்தாபித்தா ரல்லவா? கவிதை சொல்வதில் அவருக்கு இணை யாரேனும் உண்டா? அவர் கவிதார்க்கிக சிங்கமல்லவா? அவரே கவி சொல்லட்டும்" மென்றார். இதைக் கேட்ட ஸ்ரீ தேசிகன்:—

"உ ஜொவ நிஷ நிவெஶஶெ நூா நவி ஶுகூீரஊணாய ஸொஷுபிஷூநு।
ய ஃவஜ ஸிஶதி ஸவாஉஃகா கா ஶ0கொவ: ஸயஜெவஶா நநீய: ॥"

என்று ஸாதித்தார்.

திருவேங்கடவன் திருக்குறள்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ஸ்ரீ. உப. ரே. திருமலை ஐயங்கார்,

தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

உலகம் போற்றும் தமிழ்ப் பாஷையில் வழங்கப் பெறும் பாக்கள் நான்கு வகைப்படும். அவையாவன:— வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பன.

வெண்பா, வெள்ளை, அந்தணர்பா, முதற்பா எனவும் பெயர் பெறும். வெண்பா வெள்ளை என்பன, வெண்மை போன்ற தன்மை யுடைமை பற்றி வந்த ஒப்பினாகிய பெயர்கள். வெண்மை என்னும் நிறம் பிற நிறம் விராயவழித் தன்னியல்பு கெடுதல் போல, வெண்பாவும் பிறதளை விராயவழித் தன்னியல்பு குன்றிப் பிழை படுதலே வெண்மை போன்ற தன்மையாகும். அந்தணர்பா என்பது, அந்தணர் சாதி யுடைமை பற்றி வந்த பெயர். முதற்பா என்பது, அந்தணர் பிள்ளைத் தமிழினும் பிறவற்றினும் முன்னிற்றல் பற்றி வந்த பெயர்.

இவ்வெண்பா குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என்று ஐவகைப்படும். இரண்டடி யுடையதாய் முடியும் வெண்பா குறள் வெண்பா என்று சொல்லப் படும். இது முதலடியிலே நான்கு சீர்களும், மற்றை யடியிலே மூன்று சீர்களு மாக ஏழு சீர்கள் பெற்று முடியும்.

சந்தமிகு தண்டமிழ் மொழியில் மிகச் சுருங்கிய வெண்பா யாப்பிற்குக் குறள் என்று பெயர். பண்ணமருந் தமிழில் இதனினுஞ் சிறிய யாப்புக் காணப்படுவ தில்லை. நுண்ணிய பொருள் ஒன்றை ஒருவற்கு விளக்கலுறின்

அதைக் கேட்போன் உணர்வு சலியாவண்ணம் நன்கு எடுத்துப் புகட்டுதல் வேண்டும். அவ்வாறன்றிக் கேட்போன் உணர்வு இளைப்புற்று ஒழிய வாளாது விரித்துச் சொல்லப் பெறுமாயின், அது அவன் உள்ளத்தின்கண் அழுந்த மாட்டாது. மக்கள் உயிர்க்கு இன்றியமையாது வேண்டப்படும் உறுதிப் பொருள்களை நாடி, அவற்றை யெல்லாந் தம் கூரிய அறிவினால் நன்கு ஆராய்ந்து, அவை தம்மை அவர் அறிவிற் பதியச் சுருக்க வகையான் விளக்குதற் பொருட்டுத் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் இந்நுண்மையினை இனிது அறிந்து, தாம் கருதிய பொருளைக் கருதியவாறே தெரித்தற்குச் சிறந்த கருவியாக இக் குறள் வெண்பாவினால் இயற்றுவாராயிற்று உலகம் பரவும் தமது நூலாகிய திருக் குறளை.

'ஒருவன் அறிவை மயக்கி அவனைத் தன் வயப்படுத்தலும், ஒருவற்கு ஒரு பொருளின் உண்மைத் தன்மையைக் காட்டி அவன் அறிவை நன்கு விளக்கி அவனைத் தன் வயப்படுத்தலும்' என நூல்களாற் கொள்ளப்படும் முறை இரு வகைத்தாம். இதனை ஓர் உதாரணங் கொண்டு விளக்குவோம்.

ஒரு பெண், பொற்பூ இடை மிடைந்து, பொற் சரிகை விளிம்பு கோத்து, நீலப் பட்டாடை நலம் பெற உடுத்து, நிறந்தெரிந்த முழு மணிகள் அழுத்தி, நறிது முற்றிய நல்லணிகலன் அணிந்து, புழுகு நெய்யுங் கத்தூரியும் விரை கமழ நறுங் கூந்தலில் உரைத்து, உறுப்புத் திருத்தி உல்லாசங் காட்டி உவகை தரற்கு உரிய சில வுரை வரையறுத்து மொழிந்து ஓர் ஆண் மகனைத் தன் வயப்படுத்தல் போல்வது முதலிற் கூறிய முறை. இரண்டாவது முறையோ அவ்வாறின்றி, இயற்கை யழகு வாய்ப்பப் பெற்றாள் ஒரு திருமகள், செயற்கை நலம் பெறாளாய்க் கருகி நீண்ட விரிகுழற் கற்றையும், சேலெனப் பிறழும் பெருமதர் விழியும், முல்லை மொகுள் போன்ற மெல்லிய மூக்கும், கொவ்வைப் பழத்தைப் பழித்த செவ்விய இதழும், யானை மருப்பிற் பொலியும் இசைந்த எயிறும், கடைந் திருட்டியது போலும் பச்சிளந் தோளும், பூங்கொம்பு போல் ஒசிவும் உடையளாய்க் கள்ள நோக்கமின்றி உள்ளஞ் செவ்வியளாய்க் கிளியென மிழற்றி மயிலென உலவித் தன்மாட்டு முதிர்ந்த அன்புடைய காதலன்பால் தானும் உள்ளம் உருகி ஒருமித்து அவனைத் தன்பாற்படுத்தல் போல்வதாம்.

இவ்வாறு இருதிறப்பட்ட நூன் முறையுள், ஓர் உண்மையைப் பல வகையான் அலங்கரித்து விரித்துக் கூறும் நெறி மந்தவாதிகள் பொருட்டும், ஓர் உண்மையைப் பொருளைக் கிடந்தவாறே எடுத்துச் செவ்விதின் விளக்கி அறிவு கொளுத்து நெறி அதிதீவிர அதிகாரிகள் பொருட்டும் நூல்களான் மேற் கொள்ளப் பெற்றன. இவ்விரண்டுனுள்ளும் பிற் கூறிய நெறியே சிறப்புடைத் தாதல் எல்லார்க்குந் தெற்றென விளங்கும். இவ்வதி தீவிர அதிகாரிகள் நல்லறிவிற்குப் பொருந்தச் சுருங்கத் தெரித்தல் வல்ல யாப்புக் குறு வெண் பாட்டை யன்றிப் பிறிதொன்று காண வியலாது. மற்றைப் பாவிலும் பாவினங்களிலும் இங்ஙனம் ஓர் உண்மைப் பொருளைச் சொற் சுருங்க ஒதி

அவ்வுண்மை மாத்திரம் புலப்படுதல் ஒருவாற்ருனும் முடியாமை காண்க. குறட்பா மாணிக்கச் செப்பினுட் பொதிந்திட்ட கத்தூரி போல்வது. மாணிக்கச் செப்பு விலையேறப் பெறுதலுடன், செய்தமைத்தற்கும் அருமை யுடைத்தாம். அதுபோல் குறட்பாக் குணம் பெரிதாதலுடன், அமைத்தற்கும் அருமை யுடைத்து. நால் வகைப்பாக்களையும் நன்கு பாடும் பயிற்சியிற் சிறந்த பாவலர்தாமும் வெண்பாவிலே பலவாறு தடுமாறுவர். வெண்பாவிலே சீரும் தளையும் பிறவுஞ் சிறப்புற அமைத்தல் அதிகப் பிரயாசமேயாம். மோனைகளுள்ளே பொழிப்பு மோனையும், எதுகைகளுள்ளே அடியெதுகையும் அமைந்து வருதல், வெண்பாவிற்குச் சிறப்பினைக் கொடுக்கும். மேலும், மாணிக்கச் செப்பினுட் செறித்து வைத்த கத்தூரி கட்டுருவினுள் நிலைபெறக் கமழும் நறுமண முடைமை போலக் குறட் பொருளுங் கேட்கும் அதி தீவிர அதிகாரிகட்கு நினைத்தொறும் உரைத்தொறும் மகிழ்ச்சி பயந்து அவர் உள்ளத்தே ஆழ்ந்து நிலைபெறுவதாம் என்க. இதனுல், குறள் யாப்பு அதி தீவிர அதிகாரிகள் பொருட்டுச் சொற் சுருக்கமும் பொருட் செறிவும் பொதுள, இறுகிய நுண்ணிலையால் அமைக்கப் பெறும் நெறி தழுவி வந்ததாம் என்பதும் நன்கு அறியலாம். முத் தமிழ்த் துறையின் முறை போகிய உத்தமக் கவி யாகிய நம் சீரார் தூப்புல் திருவேங்கட முடையான் இத்துணைச் சிறப்பு வாய்ந்த குறள் வெண்பாவில் பாடிய சீர்மையினை எடுத்து இயம்புவதே இக் கட்டுரையின் நோக்கு. பேரறிஞர் குற்றங் களைந்து குணமே கொள்வாராக.

சந்தமிகு தமிழ் மறையோனுகிய தூப்புல் வள்ளல் மாகுரு ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய தமிழ்த் திறன் எனையோரது திறம்போல் அல்லாது, வேதாந்த உண்மையையும் தத்வ போதனையையும் பிரதானமாய்க் கொண்டு விளங்குவ தொன்ரும். பிரபந்தங்களின் தொடக்கத்திலேயே அப் பிரபந்தத்தில் அடங்கிய விஷயங்கள் இவை யெனக்குக் குறிப்பாற் கொள்ளும் படி சொல்லுவது சம்பிரதாயம். அவற்றை இவர் இரண்டு சூத்திர ரூபமான பாசுரங்களால் வெளியிட்டிருக்கின்ருர். அவையாவன :—

“ முத்திக் கருள்சூட மூன்றைத் தெளிமுன்ன
மித்திக்கா லேற்கு மிதம்.” — [அமிருதாஞ்சனி 3]

என்பதும்,

“ மூன்றி லொருமுன்று மூவிரண்டு முந்நான்குந்
தோன்றத் தொலைக் துயர்.” — (ஷை 4)

என்பதும் ஆம்.

நூற் பொருள், கற்குந் தோறுங் கற்ருர்க்கு இன்பம் செய்யும். ‘மூன்றைத் தெளி’ என்றதனுல், ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களை அறிய வேணும் என்பதும், ‘மூன்றிலொரு’ என்ற திருக்குறளால், அந்த ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களை, மூன்று வேதங்களினின்றுந் தோன்றிய ப்ரணவார்த்த விவரணமான திருமந்திரமும், அதன் விவரணமாய், மூவிரண்டு பதங்களான த்வயமும், அதன் விவரணமான முந்நான்கு பதங்களாயுள்ள சரம

ச்லோகமும் ப்ரதிபாதிக்கும் என்பதும், அவற்றை ஆசார்ய உபதேசத்தால் அடைந்து தந் நிஷ்டையுடையனாய் வர்த்திக்கு மவனுக்கு ஸம்ஸார துக்க மெல்லாம் தீரும் என்பதும், இத்தேசிகப் பிரபந்தத்தால் அறியலாம் என்று பெறப்படுகின்றது.

திருவேங்கட முடையான் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறளினது மாட்சியைச் சொல்லின், அது ஓதப்படுதற்கு எளிய சொற்களை உடையதாகியும், அரிய பொருள்களை உடையதாகியும், வேதம் எனப்படுகின்ற பொருளாகியும், அவ்வேதத்தினும் மிக விளங்கிக் குற்ற மற்றோர்கள் நினைக்குந் தோறும் நினைக்குந்தோறும் அவர்களுடைய மனத்தைக் கரைக்கும். ஆதலால் இதன் பொருளைச் சிந்தித்துக்கொள்ளுதலும், பிறராலே சொல்லப்பட்ட அதனைத் தெளிதலும் இதனைக் குறித்துச் செய்யக்கடவன. இதுவே பயிற்சி செய்து ஒழுகுமாறு. அறிவுடையோரால் சொல்லப்பட்ட பல நூல்களாலுந் தப்பாத அரிய வேதத்தினும் காப்பாற்றி வைத்திருந்து உலகத்தார்க்குச் சொல்லப்பட்ட விடயங்கள் எல்லாம், தன்னிடத்தே காட்டும்படி இத் திருக் குறளைப் பாடிய திருவேங்கட முடையானை யொப்பவர் எவ்வகைப்பட்ட பாவல ருள்ளும் இல்லை என்பது ஒருதலை. சுருங்கிய சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல் வல்லார் இவ்வேதியர் அல்லால் ஆர்? தானே முழுதுணர்ந்து, தண்டமிழின் வெண்குறளால் அறியாதவர் எளிதின் அறிய முறையாற் சொல்லி யருளிய வித்தக வேதாந்த தேசிகனுக்கு இவ்வுலகம் என்ன கைம்மாறு ஆற்றும்? இத் திருக்குறளை நம் தலை வணங்குக; வாய் துதிக்க; நன்னெஞ்சம் சிந்திக்க; செவிகள் கேட்க.

செந்தமிழ்ச் செல்வராய நம் மறைமுடித் தேசிகனுரை ஸ்ரீமத் ராமலிங்க சுவாமிகள் வேத வியாசர்போல் சூத்திரம் வகுத்தவர் எனக் கருதி, அன்னவர் அருளிச்செய்துள்ள "மூன்றிலொரு" என்ற திருக்குறட் பாசுரத்துக்குப் பௌராணிகம், அத்துவைதம், சிவாத்துவைதம், விசிஷ்டாத்துவைதம் என்ற நான்கு பிரகாரங்களில் உரை வகுத்து, அச்சீரார் தூப்புல் திருவேங்கட முடையான்பால் தமக்குள்ள பேராதரத்தைக் காட்டியுள்ளார். அவற்றை நம்மவர் கண்டு இன்புறற்காய் இங்கே தருகின்றனம். [தொடரும்.]

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீநருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

செய்திகள்

ஸ்ரீ அஹோபில மடம் ஆருவது வார்ஷிக மாலோல வித்வத் ஸதஸ்

[திருவெவ்வுளூரில் நடந்த வைபவம்]

[ஸ்ரீ. உப. ஜோ. ரங்காசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ கார்யம்]

இவ்வர்ஷம் ஸ்ரீ மாலோல வித்வத் ஸதஸ்ஸானது மார்கழிமீ 29உ காலை 11-மணிக்கு, ஸ்ரீ அஹோபில மடத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கரால் திருவெவ்வுளூர் ஸ்ரீ மடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது, மாலோல வித்வத் ஸதஸ்ஸின் மஹிமையைப் பற்றியும், ஸதஸ் ஏற்படுத்திய காரணத்தைப்பற்றியும் விஸ்தாரமாக ஸ்ரீ அழகிய சிங்கரால் பாக்க உபந்யஸிக்கும்படி இருந்தது.

ஸதஸ்ஸை நடத்துவதற் கென்றே அவ்விடம் எழுந்தருளியிருந்த ஆஸ்தான வித்வான் ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உப. தேவனார் விளாகம் லக்ஷ்மீநரஸிம்ஹாசார்ய ஸ்வாமி முதலான பண்டிதர்கள், ஸ்ரீ அழகிய சிங்கருடைய கல்யாண குணங்களைப் பற்றி விசேஷமாக உபந்யஸித்தார்கள்.

பிறகு, திருவெவ்வுளூர் என்னும் திவ்ய தேசம் 'எவ்வுள் கிடந்தான்' என்று கலியனால் மங்களாஶாஸநம் பண்ணப்பட்டதால் பகவானுக்குத் திருப்பாற்கடலை ஒத்த அஸாதாரண க்ருஹ மென்று போற்றப்படுகிற தென்றும், ஆகையால் இந்த வீக்ஷாரண்ய க்ஷேத்ரத்தில் இந்த ஸதஸ் ஸ்ரீ அழகிய சிங்கருடைய அநுக்ரஹத்தால் அடியோங்களுக்கு லபித்தது அடியோங்களுடைய பாக்ய விசேஷமென்றும், 'ஜயதி தைத்யகம் ஜக்நநாத ஜ:' என்றபடி ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருக்கிறபடியால் இந்த க்ஷேத்ரம் 'க்ஷாந்தி விம்ஶம் ஹரஸிகயத்ர தேஜோவஶீ' என்கிறபடி இன்னும் அதிக தேஜஸ்ஸுடன் விளங்குகிற தென்றும் கூறி, ஸ்ரீ அழகிய சிங்கர் அநுக்ரஹத்தால் ஸ்ரீ பாஷ்யத்தில் யதாமதி சில விஷயங்கள் சொல்வதாகவும் விஜ்ஞாபித்துக்கொண்டு உபந்யஸிக்க ஆரம்பித்தார்கள்.

பிறகு தொடர்ச்சியாக இரண்டு வேளைகளிலும் ஸ்ரீ பாஷ்யத்தில் வாக்யார்த்தங்கள் நடந்தன. ஸதஸ் ஆரம்பத்திலிருந்து ஆருவது நாள் ஸ்ரீ ராகவன் நாச்சியார் திருக்கோலத்தோடு ஸ்ரீ மடத்துக்கு எழுந்தருளி விசேஷ தளிகைகள் அமுது செய்தார். பிறகு மாமூல் வழக்கப்படி விசேஷ மர்யாதைகள் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு நடந்தன. அப்போது உயர்ந்த பீதாம்பரம் ஒன்று ஸ்ரீ அழகிய சிங்கரால் பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டது.

ஸ்ரீ அழகிய சிங்கர் திருநக்ஷத்ர மஹோத்ஸவ தினத்தன்று விசேஷ ததீயாராதனங்கள் நடந்த பிறகு, ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவம் கைங்கர்யபரர்களால் வழக்கப்படி விமர்சையாக நடத்தப்பட்டது. அப்போது நானா தேஶங்களிலிருந்து வந்த மர்யாதைகள் ஸ்ரீ அழகிய சிங்கருக்கு அந்தக் கோஷ்டியில் ஸமர்ப்பிக்கப்பட்டன. ஸ்ரீ அழகிய சிங்கரால், அப்போது வந்திருந்த வித்வான்களுக்கும் ஸலக்ஷண கனபாடிகளுக்கும் வழக்கம்போல் ஸம்பாவனை அநுக்ரஹிக்கப்பட்டது. எல்லா ஸ்வாமிகளும் ஸந்தோஷபரிதர்களாகத் தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

இவ்வுத்ஸவ மத்தியில் ஸலக்ஷண கநபாடிகள், ப்ராதிஸாக்யத்தில் ஸ்ரீ அழகிய சிங்கர் உத்ஸாஹிக்கும்படி விஷய விசாரம் செய்தனர்.

மறுநாள் ஸ்ரீமததிகரண ஸாராவளி ஸ்ரீ கோஶத்தை ஊர்வலமாகக் கொண்டு வந்து ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதிக் கெதிரில் எழுந்தருளப்பண்ண, ஸ்ரீ அழகிய சிங்கர் அந்த ஸ்ரீ கோசத்தின் பெருமையைப் பற்றி அழகாய் உபந்யஸிக்கும்படி இருந்தது. பிறகு ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமியால் அதே விஷயம் விரிவாக உபந்யஸிக் கப்பட்டு ஸதஸ் இனிது முடிவுற்றது.

* * * *

ஸ்ரீ மாலோல ஸதஸ்ஸில் அந்வயித்த வித்வான்களின் திருநாமங்கள்

ஸ்ரீ. உப. புள்ளம்பூதங்குடி ராஜகோபாலாசார்யர்
,, வடுவூர் ராமபத்ராசார்யர்
,, குரிச்சி ராமபத்ராசார்யர்
,, தேவனார்விளாகம் லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர்
,, ப்ரம்ஹதேசம் ராமாநுஜாசார்யர்
,, பழவேரி நரஸிம்ஹாசார்யர்
,, புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்
,, தையார் ஜோஸ்யம் ரங்காசார்யர்
,, சில்கூர் வெங்கடராகவாசார்யர்
,, ஸ்ரீ முஷ்ணம் ஸ்ரீநிவாஸாசார்யர்
,, முக்கூர் ராஜகோபாலாசார்யர்
,, தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்
,, திருக்குடந்தை அக்நிஹோத்ரம் தாதாசார்யர்
,, சைலி பாட்டராசார்யர்
,, D. T. தாதாசார்யர்
,, பிள்ளபாக்கம் ராமாநுஜாசார்யர்
,, திருப்பதி சேட்லூர் ராகவாசார்யர்
,, தி. ராமஸ்வாமி ஐயங்கார்
,, முக்கூர் நரஸிம்ஹாசார்யர்
,, வில்லிவலம் நாராயணாசார்யர்
,, மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்யர்
,, பாதூர் ராகவாசார்யர்
,, அத்தி க்ருஷ்ணமாசார்யர்
,, கோஷ்டீபுரம் வாஸுதேவாசார்யர்
,, வஜ்ரம் நரஸிம்ஹாசார்யர்
,, பெருக்காரணை சக்ரவர்த்யாசார்யர்
,, திருக்கள்ளம் நரஸிம்ஹராகவாசார்யர்
,, வில்லிவலம் ஸுந்தரவரதாசார்யர்
,, பழவேரி ராஜகோபாலாசார்யர்
,, திருக்கள்ளம் நரஸிம்ஹராகவாசார்யர்
,, மதுரை லக்ஷ்மணாசார்யர்
,, மதுராந்தகம் வீரராகவாசார்யர்
,, புரிசை உப்புலி ஸ்ரீநிவாஸாசார்யர்

ஸ்ரீ. உப. இஞ்சிமேடு ராஜகோபாலாசார்யர்
,, தையார் ஆராவமுதாசார்யர்
,, காலபாக்கம் குப்புஸாமி ஐயங்கார்
,, திரு. க்ருஷ்ணமாசார்யர்
,, களத்தூர் வெங்கட தீக்ஷிதர்
,, பிள்ளபாக்கம் ஸ்ரீநிவாஸாசார்யர்
,, களத்தூர் வீரராகவாசார்யர்
,, கருடபுரம் திருமலாசார்யர்
,, ஸ்ரீரங்கம் சேஷராகவாசார்யர்
,, கோஷ்டபுரம் ராமாநுஜாசார்யர்
,, கூத்தபாக்கம் லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர்
,, அன்னூர் E. S. வரதாசார்யர்
,, சொக்கனூர் வெங்கடாசார்யர்
,, ஸ்ரீ பெரும்பூதூர் க்ருஷ்ண தாதாசார்யர்
,, சென்னை ஸௌந்தரராகவன்
,, வில்லியம்பாக்க்ம் தேவநாதாசார்யர்
,, பெருக்காரணை ராஜகோபாலாசார்யர்
,, பையம்பாடி க்ருஷ்ணமாசார்யர்
,, திருப்பதி ஸ்ரீ தாள்
,, நாவல்பாக்கம் தேவநாதாசார்யர்
,, ஹேமப்பூர் ஸ்ரீநிவாஸாசார்யர்
,, திருப்பதி கோழியாலம் சடகோபாசார்யர்
,, ,, ஸ்ரீநிவாஸராகவாசார்யர்
,, ,, ராஜகோபால தாதாசார்யர்
,, வரததேசிகாசார்யர்
,, நாவல்பாக்கம் தாததேசிகாசார்யர்
,, பெருக்காரணை (நெல்லூர்) க்ருஷ்ணமாசார்யர்
,, நெல்லூர் ஸ்ரீநிவாஸாசார்யர்
,, ,, ரங்கராமாநுஜாசார்யர்
,, திருக்கள்ளம் வேதாந்தாசார்யர்
,, திருவையாறு V. R. S. தாதாசார்யர்
,, நாவல்பாக்கம் நீலமேக தாதாசார்யர்
,, வேலூர் ரங்கநாதாசார்யர்
,, திருப்பதி கோபாலஸாமி ஐயங்கார்
,, வேலாமூர் ஸ்ரீநிவாஸாசார்யர்
,, வில்லிபுரம் மாதவாசார்யர்
,, நெடுந்தெரு ஸ்ரீநிவாஸாசார்யர்
,, ,, பத்மநாபாசார்யர்
,, ஸ்ரீரங்கம் கொ. ரங்காசார்யர்
,, நாவல்பாக்கம் ஸ்ரீநிவாஸ தாதாசார்யர்
,, கொத்திமங்கலம் நாராயணாசார்யர்
,, ஒங்கூர் வீரராகவாசார்யர்
,, ஒரத்தி ரங்காசார்யர்
,, ஸ்ரீ முஷ்ணம் க்ருஷ்ணமாசார்யர்
,, குண்டலம் வரதாசார்யர்

ஸ்ரீ. உப. குரிச்சி வேதாந்தாசார்யர்
,, வில்லியம்பாக்கம் ஸம்பத்குமாராசார்யர்
,, பழவேரி சென்னை தேசிகாசார்யர்
,, கருடபுரம் தேசிகாசார்யர்
,, நாவல்பாக்கம் வரததேசிகாசார்யர்
,, அழிசூர் க்ருஷ்ணமாசார்யர்
,, நாவல்பாக்கம் ரங்கஸாமி ஐயங்கார்
,, S, S. தேசிகாசார்யர்
,, மைஸூர் சேஷாத்ரி ஐயங்கார்
,, வடுவூர் ரங்கநாதாசார்யர்
,, புரிசை க்ருஷ்ணமாசார்யர்
,, மைஸூர் திருமலாசார்யர்
,, திருப்பதி வாஸுதேவாசார்யர்
,, திருவஹீந்த்ரபுரம் ராஜகோபாலாசார்யர்
,, கருடபுரம் ஸ்ரீநிவாஸாசார்யர்
,, கோஷ்டீபுரம் தாமோதராசார்யர்
,, வ்ருத்தாசலம் ஆராவமுதாசார்யர்
,, காஞ்சீபுரம் வரதாசார்யர்
,, காலபாக்கம் ஸ்ரீநிவாஸவரதாசார்யர்
,, சொக்கனூர் நரஸிம்ஹாசார்யர்
,, திருநாராயணபுரம் ஆழ்வார் ஐயங்கார்
,, மைஸூர் வேங்கடநரஸிம்ஹாசார்யர்
,, அன்னூர் வீரராகவாசார்யர்
,, தரணி வரத விஷ்ண்வாசார்யர்
,, ஈகை வேதாந்தாசார்யர்

கநபாடிகள்

,, வடுவூர் நரஸிம்ஹாசார்யர்
,, மன்னார்குடி ராமபத்ராசார்யர்
,, காரைக்குடி வீரராகவாசார்யர்
,, தேரழுந்தூர் திருமலாசார்யர்
,, குரிச்சி ராமபத்ராசார்யர்
,, கத்வால் ஸந்தாந கோபாலாசார்யர்
,, திருப்பதி க்ருஷ்ணமாசார்யர்
,, மதுராந்தகம் பழவேரி வரதாசார்யர்
,, திருநாராயணபுரம் ஸ்ரீநிவாஸவரதாசார்யர்
,, திருக்கண்ணமங்கை சௌரிராஜாசார்யர்

* * * * *

பண்ருட்டி ஸ்ரீ மஹாராதநம்.

ஸ்ரீ அஹோபில மடம் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய 24-வது வார்ஷிக மஹாராதந மஹோத்ஸவம், பண்ருட்டி அக்ராஹாரத்தில் 17—1—47 முதல் 19—1—47 வரையில் மூன்று தினங்கள் வழக்கம் போல் அதிவிமர்சையாய் நடந்தேறியது.

முதல் நாள் காலையில் வேதபாராயண அத்யாபக க்ரந்த காலக்ஷேபங்களுடன் உத்ஸவம் உபக்ரமமாயிற்று. 17—1—47 பகல், ஸ்ரீ. உ. வே. திருவஹீந்த்ரபுரம் வித்வான் சேட்லூர் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸ மூர்த்தி ஸ்வாமியால் "ஸ்ரீ அழகிய சிங்கர் ஸ்தோத்ரமாலை" ஸமர்ப்பிக்கப்பட்டு உபந்யஸிக்கப்பட்டது. அன்றிரவு கோஷ்டீபுரம் ஸ்ரீ. உப. வித்வான் தாமோதராசாரிய ஸ்வாமியால் "சரணகதி ப்ரபாவம்" என்பதுபற்றி உபந்யாஸம் நடந்தது. 18—1—47 பகல், கள்ளக்குறிச்சி வக்கீல் ஸ்ரீ. உப. T. A. தாதாசார்ய ஸ்வாமியால் "வால்மீகியும் ராமாநுஜனும்" என்பது பற்றி உபந்யாஸமும், இரவு திருவையாறு வித்வான் கலாபூஷண கதாதுரந்தர ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் "ஸ்ரீ க்ருஷ்ண குசேலா" என்பது பற்றித் தக்க பக்க வாத்யங்களுடன் ஹரிகதா காலக்ஷேபமும் நடந்தன. 19—1—47 காலை, ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவுருவப் படத்துக்கு விசேஷமாய்ப் புஷ்பங்களால் அலங்காரம் செய்து, வேத பாராயண அத்யாபகங்களுடனும் சத்ர சாமராதி விசேஷ மேள வாத்யங்களுடனும் வீதி உத்ஸவம் அழகாய் நடத்தப்பட்டது. பிறகு சாத்துமறை மிக விசேஷமாய் நடந்தது. பகல் ஸ்ரீ. உப. வித்வான் வடுவூர் வீரராகவாசார்ய ஸ்வாமியால் "ஆசார்ய வைபவம்" என்பது பற்றி உபந்யாஸமும், பிறகு வித்வான்களுக்கும் வேதபாராயண அத்யாபக ஸ்வாமிகளுக்கும் இதர கைங்கர்ய பரர்களுக்கும் ஸ்ரீ அழகிய சிங்கரின் ப்ரஸாத ரூபமாக உசிதமாய் ஸம்பாவனைகளும் செய்யப்பட்டுக் கைங்கர்யம் இனிது முடிந்தது.

இந்த மஹோத்ஸவத்திற்குப் பல இடங்களிலிருந்து அநேக வைதிக லௌகிக ஸ்வாமிகளும் ஆஸ்திகர்களும் எழுந்தருளி யிருந்தனர்.

ஒரு சிஷ்யன்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ஸர்வஜித் ௵ சித்திரை ௴

1௳	திங்கட்கிழமை	...	மேஷ க்ருஷ்ண நவமி திதி : வர்ஷப் பிறப்புப் பண்டிகை
3௳	புதன்கிழமை	...	மேஷ க்ருஷ்ண ஏகாதசி திதி
4௳	வியாழக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி (வ்ரதம்)
7௳	ஞாயிற்றுக்கிழமை	...	அமாவாஸ்யை திதி : ஸர்வ அமாவாஸ்யை
13௳	சனிக்கிழமை	...	ஸ்ரீ உடையவர் திரு நக்ஷத்ரம்
15௳	திங்கட்கிழமை	...	மேஷ சுக்ல அஷ்டமி திதி
16௳	செவ்வாய்க்கிழமை	...	மேஷ சுக்ல நவமி—தசமி திதி த்வயம்
17௳	புதன்கிழமை	...	மேஷ சுக்ல ஏகாதசி திதி
18௳	வியாழக்கிழமை	...	மேஷ சுக்ல த்வாதசி திதி: ஸர்வ ஏகாதசி (வ்ரதம்)
20௳	சனிக்கிழமை	...	ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தீ: ஸ்ரீ மதுரகவிகள் திருநக்ஷத்ரம்
21௳	ஞாயிற்றுக்கிழமை	...	சித்ரா பூர்ணிமா
22௳	திங்கட்கிழமை	...	மேஷ க்ருஷ்ண ப்ரதமை திதி
23௳	செவ்வாய்க்கிழமை	...	த்விதீயை திதி
24௳	புதன்கிழமை	...	த்ருதீயை திதி
25௳	வியாழக்கிழமை	...	அதிதி
26௳	வெள்ளிக்கிழமை	...	சதுர்த்தி திதி
30௳	செவ்வாய்க்கிழமை	...	மேஷ க்ருஷ்ண அஷ்டமி திதி
31௳	புதன்கிழமை	...	சூந்ய திதி: வ்ருஷப ரவி 35.51. [ஸங்க்ரமண தர்ப்பணம்]

நிலையம் 18923

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

கலா சாலையின் ஐந்தாவது வார்ஷிக மஹோத்ஸவம்

ஸ்ரீ மதுராந்தகம் பாடசாலையின் ஐந்தாவது வார்ஷிக உத்ஸவத்தை, நிகழும் மாசிமீ 18வ (2—3—47) ஞாயிற்றுக்கிழமை திநம் ஸ்ரீ ஶரண்யன் தனது திருவுள்ளப் உகக்குமாறு நடத்திக் கொண்டான். பூர்வமே வரிக்கப்பட் டிருந்த திருப்பாப்புலியூர் ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, அன்று அக்ராஸநத்தை வஹித்தார். வைதிக வித்வான்களாலும் லௌகிக ப்ரபுக்களாலும் நிறைந்துள்ள மஹா ஸங்கம், பகல் 2-மணிக்குப் பாடசாலை மஹா மண்டபத்தில் கூடிற்று. இந்தப் பாடசாலை ஆரம்பித்தது முதல், அதன் உத்ஸவங்கள் எல்லாவற்றிலும் மஹத்தான உத்ஸாஹத்துடனும், அளவற்ற ப்ரீதியுடனும், தமது குடும்பத்தில் நடைபெறும் சுப முஹூர்த்தங்களில் அந்வயிப்பது போல் அந்வயித்து, அந்த உத்ஸவங்களைச் சிறப்பித்து வந்த ஸ்ரீ.உப. வி. வி. ஸ்ரீநிவாஸையங்கார் ஸ்வாமி 2-மணி முன்னதாகவே எழுந்தருளி யிருந்தார். அவருடன் கூட, அன்று நடக்க வேண்டிய ப்ரதாந உபந்யாஸத்தைச் செய்வதாக க்ருபையுடன் திருவுள்ளம் பற்றியிருந்த திண்டுக்கல் ஸ்ரீ. உப. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியும் எழுந்தருளி யிருந்தார். பாடசாலையின் கைங்கர்ய பரர்கள் எல்லாரும், வாத்ய கோஷத்துடன் அக்ராஸநாதிபதிக்குப் பூர்ண கும்ப ப்ரதாந பூர்வகமாக குஶல ஸம்ப்ரச்நங்களைச் செய்து, ஸ்வஸ்தி வாசநத்துடன் அந்த ஸ்வாமியை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்தார்கள். கோஷ்டிக்குச் சந்தந தாம்பூலாதிகள் வழங்கப்பட்டவுடன் ஸதஸ்ஸின் வ்யாபாரம் ஆரம்பித்தது. தாம்பூல ஸமர்ப்பண காலத்தில் அநேக வேத வித்துக்களால் செய்யப்பட்ட வேத கோஷம் அந்த மண்டபத்தை அநுநாதம் செய்துகொண்டு அந்த ஸ்தலம் முழுவதையும் மங்கள பூயிஷ்டமாகச் செய்ததைப் பார்த்து, அங்கு ஸந்நிஹிதர்களாயிருந்த ஸதஸ்யர்கள் எல்லாரும் ஆநந்த பரிதர்கள் ஆனார்கள்.

முதலில் ஸ்ரீ அழகிய சிங்காால் அநுக்ரஹித்து அனுப்பப்பட்ட அநுஶாஸந பத்ரம் ஸ்ரீ. உப. ஸ்ரீ கார்யம் ஸ்வாமியால் படிக்கப் பெற்றது. இதில்: ஸ்ரீ அழகிய சிங்கர் வித்யார்த்திகளின் வயஸ்ஸுக்கும் ஶீலத்துக்கும் தக்கவாறு "வித்யாசார குணைஸ் ஸம்பந்நா" என்று வித்யையில் நிஷ்பத்தியை

யும் குணங்களின் விகாஸத்தையும் ஆசாரத்தின் ஸம்ருத்தியையும் அநுக்ரஹித்திருந்தார். இது, ஸ்ரீ அழகிய சிங்கருக்கு வித்யை ஆசாரம் குணம் இவைகளின் அபிவ்ருத்தியில் இருக்கும் ச்ரத்தை, வித்யார்த்திகளின் மற்றை க்ஷேமத்தில் இருப்பதைக் காட்டிலும் பன் மடங்கு அதிகமாக இருக்கின்றதென்பதை நன்ருக விளக்குகின்றது. உண்மையாகவே மஹத்தான க்ஷோபத்தை அடைந்திருக்கும் இக்காலத்தில் நாம் ஆஶாஸிக்கவேண்டியவை இவைகளே. நிற்க: பெரியோர்கள் செய்யும் அநுக்ரஹம், அந்த அநுக்ரஹத்தைச் செய்யும் பெரியோர்களுடைய பதவிக்கும், அநுக்ரஹிக்கப்படும் சிறுவர்களுடைய வயஸ் ஶீலம் முதலியவைகளுக்கும் அநுரூபமாக இருத்தல் வேண்டு மன்ரே? ஒரு ஸமயத்தில் பெரிய ராஜர்ஷியான ஜநக மஹாராஜன் அருந்ததீ தேவியை நமஸ்கரித்த பொழுது, அருந்ததீ தேவி பின்வருமாறு ஆசீர்வதித்தாள். "அக்ஷரம் தே ஜ்யோதி: ப்ரகாஶதாம் । ஸ்வயம் த்வா வந்நாராயணதேவ: ஸவிதாஜாய பக்ஷ தபதி ।" [அக்ஷரம் என்று சொல்லப்படும் பரம் ஜ்யோதிஸ் உமக்கு ப்ரகாஶிக்கட்டும்; உயரத் தபித்துக்கொண்டிருக்கும் ஸவித்ரு மண்டலத்தின் மத்யத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந் நாராயணன் உம்மைப் பரிசுத்தம் செய்யட்டும்.] என்று அநுக்ரஹித்தாளே யொழிய, 'தீர்காயுஷ்மாந் பவ" [தீர்க்கமான ஆயுஸ் உடையவனாக இருக்கவேண்டும்] என்னும் ஸர்வ ஸாதாரணமான ஆஶீர்வாதத்தைச் செய்யவில்லை. ப்ரஹ்மவித்தாகிற ஜநக மஹாராஜனுக்கு அதுவன்ரே அநுரூபமான ஆசீர்வாதம்? அம்மாதிரி வித்யார்த்திகளை உத்தேஶித்துச் செய்யப்படும் அநுக்ரஹம், வித்யார்த்திகளுக்கு அநுரூபமாக இருத்தல் வேண்டுமன்ரே? வித்யையிலும் ஆசாரத்திலும் குணத்திலும் அபிவ்ருத்தியை ஆஶம்ஸிக்கும் அநுக்ரஹமே அவர்களுக்கு அநுரூபம். இம்மாதிரி ஸ்ரீ அழகிய சிங்கர் செய்தருளின ஆஶாஸநத்தைக் கேட்டு எல்லாரும் அதிமாத்ரம் ஆநந்தித்தார்கள்.

ஸ்ரீ அழகிய சிங்கர் திருவுள்ள முவந்து அநுக்ரஹித்து அனுப்பியருளின ஆஶாஸந ச்லோகங்கள் இவை :—

உத்யந்நாகேந்த்ர நகரே ஶ்ருதிஸ்ம்ருதிவிஹிதாசார ஸம்பந்நே ।
வாஸிஷ்டகுலஹோத்ரீயம் ஸங்கோஷம் ஸஞ்ஜநோதம் ஸுநந்நஶாம் ॥

வைஷ்ணவாநாம் த்ரயஸ்யாம் ஶாஸ்த்ரீயம் வர்த்ததாம் ஜகத்யஸ்மிந் ।
வித்யா ஆசாரகுணா ஶ்ரேய: ஸம்வர்த்திஷ்ணவஸ்ஸந்த்வேவ விஶ்வஜயவந்தே: ॥

பிறகு அத்யக்ஷருடைய முகவுரையும் ஸ்ரீ ராமஸ்வாமி ஐயங்காருடைய அத்யாச்யகசரமான உபந்யாஸமும், ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாஸையங்காரால் ஹார்த்தமான உத்ஸாஹத்துடன் செய்யப்பட்ட ப்ரஸங்கமும், இன்னும் மற்ற வித்வான்களுடைய உபந்யாஸங்களும் அதிவிலக்ஷணமாக நடைபெற்றன. இவைகளின் பெருமையைப் பற்றி அடுத்த ஸஞ்சிகையில் விண்ணப்பித்துக்கொள்வோம்.

*　　*　　*　　*

"ஸ்ரீ அஹோபில மடத்தின் சரித்ரச் சுருக்கம்" என்னும் பெயருடன் ஒரு புஸ்தகம் இங்க்லீஷ் பாஷையில் எழுதப்பட்டு வெளிவந் திருக்கிறது.

ஸ்ரீ ஸந்நிதியின் சரித்ரம்

அதன் கர்த்தா, கோயம்புத்தூரில் அட்வொகேட்டாக இருக்கும் ப்ரஹ்மஸ்ரீ. S. N. வேங்கடேச ஐயர் அவர்கள். ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி காலம் (அதாவது: கி. பி. 1398-ம் ஸூ) முதல் இன்று வரை ஆஸ்தானத்தை அலங்கரித்து வந்த ஸ்ரீ அழகிய சிங்கர்களுடைய சரித்ரங்களில் ப்ரதான அம்ஸங்களை 'ஸ்ரீ ஸந்நிதி குரு பரம்பரை' என்னும் க்ரந்தத்திலிருந்துப், திருப்பதி திருமலை தேவஸ்தான அதிகாரிகளால் ப்ரசுரம் செய்யப்பட்டுள்ள 'திருப்பதி சிலா லிகிதங்கள்' என்னும் க்ரந்தத்தி லிருந்தும், இன்னும் ஸ்ரீ அஹோபிலம் கோவில் கல்வெட்டுக்களி லிருந்தும் க்ரஹித்து, படிப்போர்க்கு ரஸிக்கும்படி எழுதி யிருக்கிறார். 1944-ம் ஸூ-ல் இப்போது ஆஸ்தானத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கர், சாதுர் மாஸ்யத்துக்காகச் சிங்கநல்லூர் க்ராமத்தில் எழுந்தருளி யிருந்தபோது, இந்த ஸ்ரீமான் வேங்கடேச ஐயருக்கு மடத்தின் விஷயத்தில் ஒரு குதூஹலம் பிறந்ததாம். ஸ்ரீ ஸந்நிதியின் விபூதி ஸம்ருத்தியைப் பார்த்து, 'இவ்வளவு பெருமையுடன் நடைபெற்று வரும் ஆஸ்தானத்தின் உத்பத்தி ஸ்திதி அபிவ்ருத்தி இவைகளை உள்ளபடி விளக்கும் சரித்ர க்ரந்தம் இந்த ஸம்ப்ரதாயத்தில் ஒன்று மில்லையே!' என்று வருந்தி, தமக்கு லப்யங்களா யிருந்த மூல ஸ்தானங்களை அணுகி இந்த க்ரந்தத்தை வெளியிட்டிருக்கிறாராம். இன்னும் இதை விஸ்தரித்து எழுதவேண்டு மென்பது அவருடைய அபிப்ராயமாம். அதற்கு அபேக்ஷிதங்களான ஸௌகர்யங்களை அவர் எதிர்பார்த்திருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது தமிழில் எழுதப்பட்டுள்ள 'ஸ்ரீ ஸந்நிதி குருபரம்பரை' என்னும் க்ரந்தம் அவ்வளவாக த்ருப்திகர மில்லை என்பது அவருடைய அபிப்ராயம். மற்றும் சிலரும் அவ்வாறே அபிப்ராயப்படுகின்றன ரெனத் தெரிகிறது. மேலும் விசாலமான வித்யாப்யாஸத் தாலும், விஷயங்களின் குண தோஷங்களைப் பராமர்ஶிக்கும் பரிசயத்தாலும், ஒருவித ஸம்ஸ்காரத்தைப் பெற்றிருக்கும் மனோவ்ருத்திகளை யுடையவர்களால் செய்யப்படும் விஷய ஶோதநத்திற்கும் அவர்களுடைய விஷய ப்ரதான ரீதிக்கும் ஒரு ஏற்ற முண்டு. ப்ரஸ்துத ஸ்ரீ வேங்கடேஶ ஐயர் அம்மாதிரியான ஸம்ஸ்காரம் பெற்றவ ராதலால், அவர் எழுதப் போவதாக உத்தேஶித்திருக்கும் க்ரந்தத்தை நாம் மிக்க குதூஹலத்துடன் எதிர்பார்த்திருக்கிறோம்.

'ஸ்ரீமான் வேங்கடேச ஐயர் ஸ்ரீ வைஷ்ணவ ரன்றே! அவருக்கு இந்த விஷயத்தில் எப்படி உத்ஸாஹ முண்டாயிற்று?' என்று சிலருக்கு ஶங்கை ஜநிக்கலாம். சிங்க நல்லூரில் இருக்கும் ப்ராஹ்மணர்க ளெல்லாரும் ப்ராயேண ஸ்ரீ வைஷ்ணவர்களே. அவர்களுள் பெரும்பாலார் ஸ்ரீ ஸந்நிதியி லிருந்துபஞ்ச ஸம்ஸ்காரம் பெற்றவர்கள். இரண்டு வர்ஷங்களுக்கு முன் ஸ்ரீ அழகியசிங்கர் அவ்விடத்தில் எழுந்தருளியிருந்தபோது, பஹு காலமாக ஸம்ஸ்காராதிகளைப் பெறுமல் இருந்தவர்க ளெல்லோரும் ஸ்ரீ அழகிய சிங்கரால் அநுக்ரஹிக்கப் பட்டார்கள்; அநேகர்க்கு ஸமாஶ்ரயணாநுஷ்டாநமும் ஸ்ரீ ஸந்நிதியில்

நடைபெற்றது. நிற்க: ஸ்ரீ ஶரண்ய னிடத்தில் பக்தி விஶேஷம் உண்டாவ தற்கு ஜந்மம் பெரிய தொரு நியாமக மன்று. யாத்ருச்சிக ஸுக்ருதாதிகளை மூலமாக உடைய ஸதாசார்ய கடாக்ஷமே அதற்கு நிபந்தநம். அது இன்னா ருக்கு இம்மாதிரி ஸம்பவிக்கு மென்று யாரால் சொல்லக் கூடும்?

இந்த க்ரந்தத்தின் க்ரயம் 0-8-0 இதனை ஸ்ரீ வெங்கடேச அய்யரிட மிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

* * * *

சில ஸ்தோத்ர ஜாலங்கள்

'பூர்வாசார்யர்கள் அருளிச் செய்திருக்கும் சில முக்யமான ஸ்தோத் ரங்கள்' என்னும் மகுடத்துடன் வெளி வந்திருக்கும் க்ரந்தம் ஒன்றை நாம் வரப் பெற்றோம். இந்த க்ரந்தத்தில் வெளிப் பட்டுள்ள ஸ்தோத்ரங்க ளாவன:—முகுந்த மாலை, ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம், சதுச்லோகி, ஸ்ரீ ஸ்தவம், தேவராஜாஷ்டகம், தேவராஜ மங்களம், யதிராஜ விம்சதி—இவைகளே. இவை, ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் வித்வான் ஸ்ரீ.உப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி இயற்றிய பதவுரை விஶேஷ உரைகளுடன் கூடி யிருக்கின்றன. அவ்வுரைகள் மிகத் தெளிவாக இருப்பதுடன், அவைகளில் அடங்கியுள்ள விஶேஷார்த்தங் களும் அவருடைய அஸாதாரண வைதுஷ்யத்தை நன்கு விளக்குகின்றன. இந்த ஸ்தோத்ர ஜாலங்களுள், முகுந்தமாலை என்பது ஸ்ரீ குலசேகராழ்வாரின் அருளிச் செயலென்று தொன்று தொட்டு ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களாலும் ப்ரஸித்தமாக அநுஸந்திக்கப்பட்டு வருகிறது. ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நமும் ஸ்ரீ சதுச்லோகியும் ஸ்ரீ ஆளவந்தாருடைய அருளிச் செயல்கள். ஸ்ரீ ஸ்தவம் என்பது, ஸ்ரீ கூரேஶனுடைய 'பஞ்சஸ்தவம்' என்னும் ஐந்து ஸ்தோத்ரங் களுள் ஒன்று. தேவராஜாஷ்டகம் என்பது, ஸ்ரீ திருக்கச்சிநம்பிகளின் அநுக்ரஹம். தேவராஜ மங்களம், யதிராஜ விம்ஶதி என்னும் இரண்டும், ஸ்ரீ மணவாள மாமுனிகளின் அருளிச் செயல்கள். அஸங்க்யேயங்களான இன்னும் அநேக ஸ்தோத்ரங்கள் இருக்க, இவைகளைத் தேர்ந் தெடுத்ததற்குக் காரணம், உரையாசிரியரின் ஈடுபாடு இந்தத் திவ்ய ஸூக்திகளில் மற் றவைகளிற் காட்டிலும் அதிமாத்ரம் அதிக மென்பதே என்று நாம் நினைக் கிறோம். இந்தப் புஸ்தகம் 'ராயல் ஆக்ருதி' என்று சொல்லப்படும் விசாலமான ஆக்ருதியுடன், உத்தமமான காகிதத்தில், ரமணீயமான அச்சுப் பதிப்புடன் வெளி வந்திருக்கின்றது. அதைப் பார்த்து நாம் மிகவும் ஆநந்திக்கி றோம். காகிதப் பஞ்சம் நர்த்தநம் செய்துகொண்டிருக்கும் இக்காலத்தில், இந்த ஸ்வாமி ஜகதுபகாரமாக மிகுந்த பரிச்ரமம் எடுத்துக்கொண்டு க்ரந்த வெளியீடு செய்துவருவது மிகவும் போற்றத் தக்க செயலாகு மென்றே கருதுகி றோம். இந்த க்ரந்தத்தின் க்ரயம் ரூ. 2—10—0. இதனை. 'ஸ்ரீ ப்ர. அண்ணங்கரா சார்யர், காஞ்சீபுரம்' என்னும் விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்